இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் *1912-1913/2020*

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண்கள் 2704-2705/2019-லிருந்து எழுகிறது)

மங்கையர்கரசி ... மேல்முறையீட்டாளர்(கள்)

-எதிர்-

எம். யுவராஜ் ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

<u>தீர்ப்புரை</u>

<u>மாண்புமிகு நீதியரசர் திரு. எ.எஸ். போபண்ணா:</u>

அனுமதி வழங்கப்பட்டன.

2. உ.ப.இ.மே. எண்கள் 23 & 24/2016-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 20.7.2018-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையை எதிர்த்து மேல்முறையீட்டாளர் இந்நீதிமன்றத்தின் முன்புள்ளார். மேல்முறையீட்டாளர் எதிர்மேல்முறையீட்டாளரின் மனைவியாவார். இரு தரப்பினர்களுமே ஒருவருக்கொருவரை எதிர்த்து வழக்கு நடவடிக்கைகளைத் தொடர்ந்துள்ளதாலும், வெவ்வேறு வழக்கு நடவடிக்கைகளிலும் தரப்பினர்களின் படிநிலை வெவ்வேறாக உள்ளதாலும், அவ்வாறான சூழ்நிலைக்கேற்றவாறு, வசதிக்காகவும் தெளிவுபடுத்தும்பொருட்டும், இதிலுள்ள மேல்முறையீட்டாளர் 'மனைவி' எனவும், இதிலுள்ள எதிர்மேல்முறையீட்டாளர் 'கணவர்' எனவும் குறிப்பிடப்படுகின்றனர்.

3. இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13-இன் கீழ் மணமுறிவு கோரி கணவர் வழக்குத் தொடர்ந்தார். மறுபுறம், இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 9-இன் கீழ்

மண வாழ்வுரிமை மீட்டளிப்புக் கோரி மனைவி வழக்குத் தொடர்ந்துள்ளார். அதற்குரிய மனுக்கள் இ.தி.மு.ம. எண் 13/2010 (பழைய எண் 532/2007) மற்றும் இ.தி.மு.ம. எண் 27/2008-ஆக பதிவு செய்யப்பட்டு அவை ஒன்றிணைக்கப்பட்டது, மேலும், பொள்ளாச்சி, கற்றறிந்த சார்பு நீதிபதி அவர்களால், 26.11.2010-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மூலம் கணவரால் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டு, மனைவியால் தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டது. அத்தீர்ப்புரையால் குறையுற்றதாகக் கூறி, கணவர் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமான கோயம்புத்தூர் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியின் முன்பு உ.ப.மே. எண் 90/2011 மற்றும் 71/2011-இல் மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்தார். முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் வழக்கைப் பரிசீலனை செய்ததன்பேரில், கணவரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளைத் தள்ளுபடி செய்தது. ஆதலால், கணவர், மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் முன்பு உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 100-இன் கீழ் உ.ப.இ.மே. எண்கள் 23 & 24/2016-இல் இரண்டாம் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றமானது, 20.7.2018-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம் மேல்முறையீடுகளை அனுமதித்து, மணவாழ்வுரிமை மீட்டளிப்புக்கான உத்தரவை நீக்கறவு செய்து, இதிலுள்ள தரப்பினர்களுக்கிடையேயான மண உறவை முறித்தது. அதனடிப்படையில், மேல்முறையீட்டாளர்-மனைவி இம்மேல்முறையீடுகளில் இந்நீதிமன்றத்தின் முன்புள்ளார்.

4. தரப்பினர்கள் ஒருவருக்கொருவர் காதல் வயப்பட்டதன்பேரிலேயே, 8.4.2005 அன்று அவர்களுக்கு முறைப்படி திருமணம் நடந்தது என்பதில் மறுப்புக்கிடமில்லை. வாதக்கூறுகளின்படி, மனைவியானவர் கணவனைவிட ஆறு-ஏழு வயது மூத்தவராவார். தரப்பினர்களுக்கு 3.1.2007 அன்று பிறந்த ஒரு பெண் குழந்தையுமுள்ளது.

மண வாழ்க்கையில் தரப்பினர்களுக்கிடையே சில கருத்துவேறுபாடுகள் ஆரம்பமாகியது. மனைவி சண்டைபோடும் குணமுடையவர் என்பதும், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் முன்னிலையில் தகாத வார்த்தைகளைப் பேசினார் என்பதும், மேலும், அவர், கணவர் பணிபுரிந்த கல்லூரிக்குச் சென்று, மாணவர்களின் முன்னிலையில் கெட்ட வார்த்தைகளைப் பேசியதால் அவருக்கு அவமானம் ஏற்பட்டது என்பதும் கணவரின் குற்றச்சாட்டாகும். தாம் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால், மனைவியின் அத்தகைய நடத்தையை பொறுத்துக்கொள்ளமுடியாது என்று கூறி கணவர், 7.12.2006-ஆம் தேதியன்று சட்டப்படியான அறிவிப்பை அனுப்பினார். அதற்கு மனைவியால் பதில் ஏதுமளிக்கப்படவில்லை. எனவே, கணவர், மணமுறிவு கோரி, இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13-இன் கீழ் இ.தி.மு.ம. எண் 65/2007-இல் மனு தாக்கல் செய்தார். மனைவி விசாரணை நீதிமன்றத்தின் முன்பு முன்னிலையாகி, இயல்பான மணவாழ்க்கையை நடத்துவதாக அவரால் உறுதியளிக்கப்பட்டதன்பேரில், மனுவானது மேற்கொண்டு வலியுறுத்தப்படவில்லை என்று கணவர் வாதுரைத்துள்ளார். அதன்பின்னர், சுமார் ஐந்து நாட்களிலேயே மனைவி கல்லூரிக்குச் சென்று, அவரை அவதூறாகப் பேசியதுடன், 12.4.2007 அன்று புகுந்த வீட்டைவிட்டுச் சென்றுவிட்டார் என்று கணவர் குற்றஞ்சாட்டியுள்ளார். தொடக்கத்தில் கூறப்பட்டுள்ள அதே குற்றச்சாட்டுகளின் பின்புலத்தில், மணமுறிவு கோரி இ.தி.மு.ம. எண் 13/2010 (பழைய எண் 532/2007)-இல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

5. மனைவி முன்னிலையாகி, கணவரின் சாட்டுரைகளுக்கு ஆட்சேபணை தெரிவித்து மறுப்புரைத் தாக்கல் செய்தார். திருமணத்தின்போது கணவரின் கல்வித்தகுதி மற்றும் அவரது பணி தொடர்பான பொருண்மைசார்ந்த அம்சங்களும் எதிர்த்துரைக்கப்பட்டன. அவர்கள் திருமணத்திற்குப் பின்னர், 2005-ஆம் ஆண்டு வரை

சத்தியமங்கலத்திலும், அதன்பின்னர் 2006-ஆம் ஆண்டு டிசம்பர் வரை சரவணம்பட்டியிலும் ஒன்றாக வசித்து வந்ததாக மனைவியால் வாதிடப்பட்டது. கணவரின் பெற்றோர்களின் சொந்த ஊருக்கும் மேற்குறிப்பிடப்பட்ட இடங்களுக்கும் இடையேயான தூரமானது 120 கி.மீ.க்கும் அதிகமாக இருந்தது என்றும், அவ்வளவு தூரம் பயணிப்பது கடினமான ஒன்று என்றும் வாதுரைக்கப்பட்டது. எனவே, அவர்களை அவமதித்ததான குற்றச்சாட்டில் உண்மையில்லை. அதைத்தொடர்ந்து, கணவருக்கும், அவரது பெற்றோர்களுக்கும் இடையேயான உறவு சுமூகமாக இருந்தது என்றும், அவர்கள் ஒன்றாக வசித்துவந்தபோது, உறவினர்கள் மற்றும் வீட்டிற்கு வருபவர்களிடம் மனைவி நன்றாகவே நடந்துகொண்டார் என்றும் கூறப்பட்டது. எனவே, அவரது அநாகரிகமான நடத்தைக்குறித்த குற்றச்சாட்டும் எதிர்க்கப்படுகிறது. 7.12.2006 அன்று கணவரால் அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பை பொறுத்தவரையில், மனைவி கருவுற்றிருந்தசமயத்தில், கணவர் அவரது பெற்றோர்களின் வற்புறுத்தலின்பேரில்தான் சட்ட அறிவிப்பை அனுப்பியதாகவும், மேலும், அதில் குறிப்பிடப்பட்டிருந்த எதுவும் கணவரின் கருத்துப்படியானதல்ல என்று கணவர், மனைவியிடம் கூறியதாகவும் வாதுரைக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் சுமார் 25 நாட்களுக்குள் மனைவி ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்தார் என்றும், முந்தைய மனுவான இ.தி.மு.ம. எண் 65/2007-யிலுங்கூட அவர் முன்னிலையாகி, கணவருடன் சேர்ந்து வாழ்வதற்கான அவருடைய விருப்பத்தைக் குறித்து தெரிவிக்கும்படி கோரப்பட்டதை, அவர் ஐயப்பாட்டிற்கிடமின்றி விருப்பம் தெரிவித்ததாகவும் தெரிகிறது. அவரது பெற்றோர்களின் தூண்டுதலினால்தான் மேற்படியான வழக்கிடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில், மனைவி, குற்றச்சாட்டுகளை மறுத்து, மனுவைத் தள்ளுபடி செய்யும்படி கோரினார்.

6. இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 9-இன் கீழ் மண வாழ்வுரிமை மீட்டளிப்புக் கோரி, மனைவியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், அவர், திருமணம் நடைபெற்ற முறை குறித்து குறிப்பிட்டதுடன், நியாயமான காரணங்களின்றி, அவர்கள் பிரிந்து வாழ்ந்துவருவதாகவும், ஆகவே, பரிகாரம் கோருவதாகவும் குறிப்பிட்டிருந்தார். கணவர் முன்னிலையாகி, தரப்பினர்கள் இருவேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்றும் மேலும், வயது வித்தியாசத்தையும் குறிப்பிட்டு மறுப்புரைத் தாக்கல் செய்தார். மேலும், மனுவிலுள்ள வாதக்கூறுகள் மறுக்கப்பட்டன. கணவர், நிகமம் காவல் நிலையத்தில் குற்ற எண் 401/2007-இல் மனைவியால் தாக்கல் செய்யப்பட்ட புகார் குறித்தும், அதில் அவர் காவல்துறையால் கைது செய்யப்பட்டு, ஏழு நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்ததைக் குறித்தும் குறிப்பிட்டிருந்தார். அதனடிப்படையில் தரப்பினர்களுக்கிடையேயான திருமண உறவானது ஒரு கட்டத்தில் சீர்ப்படுத்தவியலாத அளவிற்கு முறிந்துவிட்டநிலையிலிருந்ததால் மனுவைத் தள்ளுபடி செய்யும்படி கோரப்பட்டது என்று வாதிடப்பட்டது.

7. விசாரணை நீதிமன்றமானது, எதிரெதிர் வாதங்களின் அடிப்படையில் வழக்கெழுவினாக்களை வனைந்தது. கணவரும், சாட்சிகளும் வா.சா.1 முதல் வா.சா.4-ஆக விசாரிக்கப்பட்டு, எ.1 முதல் எ.5 வரையிலான சான்றாவணங்கள் முன்வைக்கப்பட்டன, அதேசமயத்தில் மனைவியும், சாட்சிகளும் எ.சா.1 முதல் எ.சா.3-ஆக விசாரிக்கப்பட்டு, ஆர்.1 முதல் ஆர்.3 வரையிலான சான்றாவணங்கள் முன்வைக்கப்பட்டன. விசாரணை நீதிமன்றம், அளிக்கப்பட்ட சாட்சியத்தைச் சுட்டிக்காட்டியபின் மனுவைத் தள்ளுபடி செய்தது. அவ்வாறு செய்கையில், விசாரணை நீதிமன்றம், அளிக்கப்பட்ட சாட்சியத்தை விரிவாகக் குறிப்பிட்டுக்காட்டியது, அதன்படியான குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரையில், திருமணம் முடிந்து

15 மாதங்களுக்குப் பின்னர் அவர்களுக்கிடையே சண்டை தொடங்கியது என்றும், அவரது மனைவி அண்டைவீட்டாருடன் சண்டையிடும் குணமுடையவராக இருந்ததன் காரணமாகவே, அவர் சுமார் ஏழு வீடுகள் மாறினார் என்றும் நிரூபிப்பதற்கு ஏதொரு சாட்சியையும் கணவர் விசாரித்திருக்கவில்லை என்பது விசாரணை நீதிமன்றத்தின் கருத்துரையாகும். மேலும், விசாரிக்கப்பட்ட சாட்சிகளிலிருந்து, மாணவர்கள் மற்றும் உடன்-பணிபுரிபவர்களின் முன்னிலையில் மனைவி, கணவனைத் தகாத வார்த்தைகளால் திட்டினார் என்ற குற்றச்சாட்டிற்கு தொடர்புடைய சான்றேதுமில்லை எனவும் கருத்துரைக்கப்பட்டது. அதனடிப்படையில், வா.சா.1-ஆன கணவராலான குற்றச்சாட்டையும், மனைவி தனது பெற்றோர்களின் வீட்டில் ஆடம்பரமாக வாழ்ந்துவந்தார் என்று சாட்சிகளாக (வா.சா.2 மற்றும் வா.சா.3) விசாரிக்கப்பட்டுள்ள உறவினர்களின் சாட்டுரையையும் விசாரணை நீதிமன்றம் கவனத்திற்கொண்டது. அதனடிப்படையில் விசாரணை நீதிமன்றம், தரப்பினர்களுக்கிடையே திருமணம் நடைபெற்ற முறையைக் கருத்திற்கொண்டும், மேலும், 3.1.2007 அன்று திருமண பந்தம் மூலம் ஒரு பெண் குழந்தை பிறந்ததைக் கருத்திற்கொண்டும், மணமுறிவு கோரும் மனு, கணவருடைய பெற்றோர்களின் தூண்டுதலின்பேரிலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மணமுறிவை வழங்குவதற்கான மெய்யான காரணம் ஏதுமில்லை என்றும் கருத்துரைத்தது.

8. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமானது, கணவரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளைப் பரிசீலிக்கையில், விசாரணை நீதிமன்றத்தின் முன்பு குறிப்பிடப்பட்டுள்ள சான்றினைக் கருத்திற்கொண்டும், அதனடிப்படையில் வழக்கை மறுமதிப்பீடு செய்தும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையை உறுதிசெய்தது.

9. உயர் நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டில், அது பரிசீலனைக்காக முக்கியமான சட்ட வினாக்களை எழுப்பியது:

> "1. கீழமை நீதிமன்றங்கள் மனரீதியான கொடுமை என்ற காரணத்தின்பேரில் குறிப்பாக மேல்முறையீட்டாளர் மற்றும் மாமனார்-மாமியார் ஆகியோருக்கெதிராக எதிர்மேல்முறையீட்டாளர் 24.11.2007 அன்று வரதட்சணை கொடுமைக்காக சாட்டுரைக்கப்பட்ட புகார் அளித்ததைத் தொடர்ந்து காவல்துறையால் கைதுசெய்யப்பட்டனர் என்பது இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13(1)(i-அ)-இன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு, மறுக்கமுடியாதவகையில் கொடுமையை நிறுவுகிறது எனும்போது, மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளரின் திருமணத்தை முறிக்கத் தவறியது ஏற்புடையதும், நியாயமானதுமாகுமா?
>
> 2. மேல்முறையீட்டாளர் மற்றும் மாமனார்-மாமியார் ஆகியோருக்கு எதிராக எதிர்மேல்முறையீட்டாளர்-மனைவி அளித்த வரதட்சனைக் கொடுமைக்கான பொய்யான குற்றப்புகார் தாக்கல் செய்ததைப் பொறுத்து, பின்னிட்ட நிகழ்வினைப் புறந்தள்ளி, மணமுறிவுக்கான மனுவைத் தள்ளுபடி செய்த கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புரைகள் சட்டப்படி நிலைநிறுத்தத்தக்கவையா?

3. கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புரை குறிப்பாக, பொள்ளாச்சி, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 2-இன் கோப்பிலுள்ள ஆ.ப.வ. எண் 149/2008-இல் தொடரப்பட்ட வரதட்சணை கொடுமைக்கான குற்ற வழக்கு நடவடிக்கை மதிப்புறு விடுதலையில் முடிந்துள்ளபோது அது ஏற்புடையதும், நியாயமானதுமாகுமா?

4. கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புரை நெறிபிறழ்வானவையா?"

10. கணவர் வரதட்சணை கோரினார் என சாட்டுரைத்து, மனைவியால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் வழக்கானது, ஆ.ப.வ. எண். *149/2008*-இல் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவ்வழக்கு நடவடிக்கையில் சாட்சியம் இல்லாததால், குற்றச்சாட்டு பொய்யானது என கண்டறியப்பட்டுள்ளபோது, அது இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு *13(1)*(i-அ)-இன் கருத்துப்படி மனரீதியான கொடுமையை ஏற்படுத்தும் செயல் என்று அப்பின்னணியில் உயர் நீதிமன்றம் முடிவு கண்டு, அதனடிப்படையில் மேல்முறையீட்டை அனுமதித்தது.

11. மேல்முறையீட்டாளர்-மனைவியின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. எஸ். நந்தகுமார் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்-கணவரின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. பீ. ரகுநாத் ஆகியோரின் வாதங்களைக்கேட்டு, மேல்முறையீட்டு வழக்குத்தாள்களை பார்வையிட்டோம்.

12. கற்றறிந்த வழக்குரைஞரால் முன்வைக்கப்பட்ட வாதுரைகளின் அடிப்படையில், அண்டைவீட்டார், நண்பர்கள் மற்றும் வீட்டிற்கு வருபவர்களுடன் மனைவி சண்டையிடுவதால் அவரின் இந்த நடத்தை மட்டுமீறியதாகும் என்ற சாட்டுரையின்பேரில் மணமுறிவுக்கான மனு கணவரால் தாக்கல் செய்யப்பட்டது

என்பது வழக்குத் தாள்களைப் பார்வையிடுவதிலிருந்து தெரியவருகிறது. மேலும், அவர், கணவர் பணிபுரியும் இடத்திற்குச் சென்று மாணவர்கள் மற்றும் மற்ற உடன்-பணிபுரிபவர்களின் முன்னிலையில் அவரை தரக்குறைவாகப் பேசினார் என்று சாட்டுரைக்கப்பட்டது. மேற்படி சாட்டுரைகள் தொடர்பாக, விசாரணை நீதிமன்றம் வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலானவர்கள் அளித்த சாட்சியத்தைக் கவனத்திற்கொண்டு, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்டுரைகளை நிரூபிப்பதற்கு மேற்படியான சான்று போதுமானதல்ல என்ற முடிவை எட்டியது. பதிவிலுள்ள சான்று விரிவாகக் குறிப்பிடப்பட்டு, ஓர் முடிவு எட்டப்பட்டது என்பதை விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையைச் சாதாரணமாகப் பார்வையிடுவதிலிருந்து தெரிகிறது. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமும், மேற்படி சான்றினைக் குறிப்பிட்டு, அதை மறுமதிப்பீடு செய்து அதன் முடிவை எட்டியது. அத்தகைய சூழ்நிலையில் தற்போதுள்ள வழக்கு நடவடிக்கையில் விசாரணை நீதிமன்றம் சான்றினை குறிப்பிட்டுக்காட்டியுள்ளது, மேலும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் சாட்சியத்தை மறுமதிப்பீடு செய்வதில் இறுதி நீதிமன்றமாக இருப்பதால், மேற்படி நடைமுறையை மேற்கொண்டு, வழக்கில் ஒருங்கியல்வான தீர்முடிவை எட்டியது என்கிறவிடத்து, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 100-இன் கீழ் ஓர் இரண்டாம் மேல்முறையீட்டில், உயர் நீதிமன்றம் அதற்குரிய வரம்பிற்குட்பட்டு, சாட்சியை மறுமதிப்பீடு செய்வதற்குரியதோ அல்லது தற்போதுள்ள மேல்முறையீடுகளில் இந்நீதிமன்றம் அவ்வாறு செய்வதற்கோ உரியதல்ல என்னும் சட்ட நிலைப்பாடு நன்கு அறுதியிடப்பட்டுள்ளது.

13. அக்கோணத்தில் பார்த்தால், விசாரணை நீதிமன்றத்தின் முன்பு அளிக்கப்பட்ட சான்றை நாங்கள் மீண்டுமொருமுறை குறிப்பிட்டுக்காட்டவில்லை. அது

அவ்வாறே விசாரணை நீதிமன்றத்தால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அத்தகைய சூழ்நிலையில், முக்கியமான சட்ட வினாவின் அடிப்படையில் உயர் நீதிமன்றம் தலையிடுவதற்கான வரம்புக்குட்பட்டிருந்தது. உயர் நீதிமன்றத்தால் வனையப்பட்ட முக்கியமான சட்ட வினா எடுகுறிப்பிடப்பட்டு, இத்தீர்ப்புரையின் போக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடக்கத்திலேயே தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தின் முன்பு மேற்கொண்ட வழக்கு நடவடிக்கைகளின் முறையை கவனிக்கிறபோது, எழுப்பப்பட்ட வினாக்கள் முக்கியமான சட்டவினாக்கள் என்ற தகுதியைப்பெறாது என்பது வனையப்பட்ட சட்ட வினாக்களைப் பார்வையிட்டதிலிருந்து தெரியவருகிறது. உள்ளபடியாக வனையப்பட்ட சட்டவினாக்கள், முக்கியமான சட்ட வினாக்களாக அல்லாமல் சாட்சியத்தை மறுமதிப்பீடு செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. தற்போதைய பொருண்மைகளில் கண்டவாறு, கணவர், இ.தி.மு.ம. எண் *65/2007*-இல் மணமுறிவு கோரி முதலில் மனு தாக்கல் செய்தார், அதில் மனைவி, உறவினர்கள் மற்றும் நண்பர்களின் முன்னிலையில் தகாத வார்த்தைகளைப் பேசினார் என்பதையும், மேலும், கணவரின் மாணவர்கள் முன்னிலையிலும் அத்தகைய வார்த்தைகளைப் பேசினார் என்பதையுமே குற்றச்சாட்டுகளின்பேரில் வலியுறுத்திக்கூறப்பட்டது. அதனடிப்படையில் கணவர், கொடுமை என்ற காரணத்தின்பேரில் சாட்டுரைத்து மணமுறிவைக் கோரினார். முதலில் தரப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி மனுவில், அதுகுறித்த தரப்பினர்களின் வாதுரைகள் வேறுபட்டு இருந்ததாலுங்கூட, அது வற்புறுத்தப்படவில்லை என்பது ஐயத்திற்கிடமற்ற உண்மை, மேலும், மனைவி, இனிமேல் சரியாக நடந்துகொள்வதாக உறுதியளித்ததன்பேரில் அம்மனு வற்புறுத்தப்படவில்லை என்று கணவர் வாதுரைத்திருப்பதாலும், அதேவேளையில் மேற்படி வழக்கு நடவடிக்கைகள் கணவரின் பெற்றோர்களின் தூண்டுதலின்பேரிலேயே

தொடரப்பட்டிருந்தது என்று மனைவி வாதுரைத்திருப்பதற்குட்பட்டு அதன்பின்னர், அது வற்புறுத்தப்படவில்லை என்பதாகும்.

14. அது அவ்வாறிருக்கையில், பின்னிட்ட மனு, முதலில் இ.தி.மு.ம. எண் 532/2007-ஆக எண்ணிடப்பட்ட இ.தி.மு.ம. எண். 13/2010-இல் கணவரால் தாக்கல் செய்யப்பட்டபோதிலும், அதுவும் ஒரேவிதமான குற்றச்சாட்டுகளின் தொகுப்பின்பேரிலேயே தாக்கல் செய்யப்பட்டதாகும். மேலும், அந்தக் குறிப்பிட்ட சமயத்தில், மனைவியும் இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 9-இன் கீழ் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த பின்புலத்தில், விசாரணை நீதிமன்றம் முன்பான வழக்கு நடவடிக்கையில் பின்னிட்டு அக்குற்றவியல் வழக்குக்கு ஒரு குறிப்பீடு செய்யப்பட்டபோதிலும், அன்றையநாளில் மணமுறிவு கோரி வழக்கு நடவடிக்கைகளைத் தொடர்ந்த கணவருக்கான வழக்குமூலம் எழுந்துவிட்டது என்பதற்காக அது அடிப்படையாய் அமையாது, ஆதலால், அத்தகைய குற்ற முறையீட்டைத் தாக்கல் செய்ததன்மூலம் மனரீதியான கொடுமையை விளைவித்ததாக ஒரு காரணம் எழுப்பப்பட்டது. அவ்வாறான நிலை உள்ளபோது, மணமுறிவுக்கான மனுவைத் தொடர்வதற்கான ஒரு சூழ்நிலை அடிப்படையாக அமையாதபோது அது விசாரணை நீதிமன்றத்தின் முன்பு சான்றளிப்பதற்கும், முடிவு எடுப்பதற்கும் ஒரு பிரச்சினையாகவே இல்லாதபோது, உயர் நீதிமன்றம், அது தொடர்பாக அதனை ஒரு முக்கியமான சட்டவினாவாக எழுப்பி, அதற்கு முடிவுகண்டதில் நியாயமில்லை. எச்சான்றின் அடிப்படையில் மணமுறிவு கோரப்பட்டது என்ற குறிப்பீடு எதுவுமில்லை என்பதையும், அது விசாரணை நீதிமன்றத்தாலும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தாலும் மறுத்துரைக்கப்பட்டிருந்தது என்பதையும், அத்தகைய பரிசீலனையானது முக்கியமான சட்டவினா எதனையும் எழுப்பியிருந்ததா? என்பதையும் உயர் நீதிமன்றத்

தீர்ப்புரையைப் பார்வையிடுவதிலிருந்து தெரியவருகிறது. ஆனால், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் அளிக்கப்பட்ட தீர்ப்புரையின்மேல் சார்வுற்று, முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு மணமுறிவு வழங்கப்பட்டது. தற்போதைய வழக்கில் வனையப்பட்ட முக்கியமான சட்ட வினாக்களின் உள்நோக்கமும் அதனடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்முடிவும் ஏற்றுக்கொள்ளப்பட்டால், ஒவ்வொரு வழக்கிலும் திருமணமான தரப்பினர்களுள் ஒருவரால் ஒரு குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்படுமானால் அதில் அளிக்கப்படும் விடுதலை, தானாகவே மணமுறிவு வழங்குவதற்கான காரணமாக கருதப்படக்கூடிய சூழ்நிலைக்கு வழிகோலிவிடும். மேலும், இது சட்டப்படியான வகைமுறைக்கு எதிரானதாகவும் இருக்கும்.

15. குறிப்பிட்டதொரு வழக்கில், வரதட்சணைக் கோருதல் என்ற உறுதியற்ற குற்றச்சாட்டோ அல்லது அவ்வாறான வேறு குற்றச்சாட்டோ சுமத்தப்பட்டு, கணவரும் அவரது குடும்பத்தினரும் குற்ற வழக்கிற்குட்படுத்தப்பட்டு, இறுதியில் அத்தகைய குற்றச்சாட்டு ஆதாரமற்றது மற்றும் அடிப்படையற்றதென அறியப்பட்டால், மனைவியின் அச்செயலே கணவருக்கு மனரீதியான கொடுமை விளைவிக்கப்பட்டது என்று அவர் சாட்டுரைப்பதற்கு அடிப்படையாக அமைந்துவிட்டால், உறுதியாக அத்தகைய சூழ்நிலையில், அந்தக் காரணத்தின்பேரில் மணமுறிவுக்கான மனு தாக்கல் செய்யப்பட்டு, முதலேற்பு நீதிமன்றத்தின் முன்பு மனரீதியான கொடுமை என்று சாட்டுரைத்து சாட்சியம் அளிக்கப்படுமானால், அக்காரணத்தின்பேரில் மணமுறிவு செய்வதற்கான நோக்கம் நன்கு மதிப்பீடு செய்யப்படும் என்பதில் ஐயமேதுமில்லை. எனினும், ஏற்கெனவே குறிப்பிட்டவாறு இப்பொருண்மைகளின் சூழ்நிலை அவ்வாறாக இல்லை. மனைவியால் குற்றவியல் முறையீடு அளிக்கப்பட்டு, அவ்வழக்கு நடவடிக்கைகளிலிருந்து கணவர் விடுதலை செய்யப்பட்டிருந்தாலும், அதனடிப்படையில்

கணவர், மனரீதியான கொடுமை எனச் சாட்டுரைத்து, இது தொடர்பாக விசாரணை நீதிமன்றத்தை அணுகவில்லை, அவரது மட்டுமீறிய நடத்தை தொடர்பாகவே, இரு கீழமை நீதிமன்றங்களும் சாட்சியத்தை மதிப்பீடு செய்து, அது நிரூபிக்கப்படவில்லை என்ற முடிவை எட்டியது. அந்தப் பின்னணியில், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, உயர் நீதிமன்றத்தின் முடிவு நியாயமானதல்ல என நாங்கள் கருதுகிறோம்.

16. எனினும், 2007-ஆம் ஆண்டு முதலே தரப்பினர்கள் வழக்காடிக்கொண்டும், பிரிந்தும் வாழ்ந்துவருகின்றனர் என்று எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதுரைத்தார். அச்சூழ்நிலையில், திருமணமானது சீர்ப்படுத்த முடியாதவகையில் முறிந்துவிட்டதால், உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட மணமுறிவு நிலைநிறுத்தப்படவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டது. கற்றறிந்த வழக்குரைஞர், **நவீன் கோலி -எதிர்- நீலு கோலி** *(2006) 4 எஸ்.சி.சி. 558*, **சங்கமித்ரா கோஷ் -எதிர்- காஜல் குமார் கோஷ்** *(2007) 2 எஸ்.சி.சி. 220* மற்றும் **சமர் கோஷ் -எதிர்- ஜெயா கோஷ்** *(2007) 4 எஸ்.சி.சி. 511* ஆகிய வழக்குகளின் தீர்முடிவுகளில் சார்வுற்று, தொடர்ந்து மிக நீண்டகால பிரிந்துறைதல் இருக்குமிடத்து, அது புனைக்கதையாகிவிடும் என்றுரைத்து, அத்தகைய திருமணம் முறிக்கத்தக்கதாகும் என்று வாதுரைத்தார். மணமுறிவுக்கான தீர்முடிவினை, கிடைக்கப்பெற்ற காரணங்களைத் தவிர, ஒவ்வொரு வழக்கின் அடிப்படையில் எடுத்துக்கொள்ள வேண்டும், மேலும், அங்கு கண்டிப்பான விதிமுறை இருக்கக்கூடாது என்பதால் வகுத்துரைக்கப்பட்ட சட்ட நிலைப்பாட்டின்பேரில், அதனை விரிவாகக் குறிப்பிடவேண்டியதில்லை. இந்நீதிமன்றம், உரிய வழக்குகளில் யாதொரு தருணத்திலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறு 142-இன் கீழான

அதிகாரத்தைச் செயல்படுத்தலாம். ஆயினும், தற்போதைய சங்கதிகளின்பேரில், அந்த அம்சத்தைக் குறித்து ஆழ்ந்தாராய்ந்ததன்பேரில், தரப்பினர்கள் நடுத்தர குடும்பப் பின்னணியிலிருந்து வந்தவர்கள் என்பதையும், அங்கு மணமுறிவு ஒரு சமூகக்கட்டுக்கோப்புக்கு எதிரானதாகக் கருதப்படுகிறது என்பதையும், மேலும், அவர்களுக்கு *3.1.2007* அன்று பிறந்த பெண் குழந்தை உள்ளது என்பதையும், அவளுக்கு தற்போது சுமார் *13* வயதாகிறது என்பதையும் நாங்கள் கண்டோம். தரப்பினர்களுக்கிடையேயான கருத்து வேறுபாடுகள் முக்கியத்துவம் பெறுமளவில் இல்லாது, திருமண வாழ்வில் இயல்பாகவே ஏற்படும் கோபதாபங்களாக இருக்கும் ஒரு வழக்கில், குழந்தையின் எதிர்காலமும், மேலும் அவளது திருமண வாய்ப்பினையும் கருத்திற்கொண்டு, அத்தகையதொரு சூழ்நிலையில், அவர்கள் வழக்கு தொடர்ந்துவிட்டனர் மற்றும் அவர்கள் சில காலமாக பிரிந்து வாழ்ந்துவருகின்றனர் என்பதனால் மட்டுமே தற்போதைய சங்கதிகளின்பேரில் குறிப்பாக மணவாழ்வுரிமைகளும், மீட்டளிப்புரிமைகளும் பரிசீலிக்கப்பட்டுவரும் இதேசமயத்தில் மணமுறிவு நியாயப்படுத்தப்படமாட்டாது.

17. அதனைக் கருத்திற்கொண்டு, உயர் நீதிமன்றத்தால் வனையப்பட்ட முக்கியமான சட்ட வினாக்களின் தன்மையே நியாயப்படுத்தப்படவில்லை என்ற முடிவினை எடுத்து, எடுக்கப்பட்ட முடிவும் நிலைநிறுத்தத்தக்கதல்ல என்பதால் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரை நீக்கறவு செய்யப்பட வேண்டியதாகிறது.

18. இறுதியாக, உ.ப.இ.மே. எண்கள் *23* & *24/2016*-இல் *20.7.2018*-ஆம் தேதியன்று வழங்கப்பட்ட தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது. இ.தி.மு.ம. எண் *13/2010* மற்றும் இ.தி.மு.ம. எண் *27/2008*-இல் *26.11.2010*-ஆம் தேதியன்று வழங்கப்பட்ட தீர்ப்புரை உ.ப.மே. எண் *90/2011* மற்றும் உ.ப.மே. எண் *71/2011*-இல்

உறுதி செய்யப்பட்டு மீட்டளிக்கப்படுகின்றது. அதன்படி, செலவுத்தொகை குறித்த உத்தரவு ஏதுமின்றி மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.

19. நிலுவை விண்ணப்பங்கள் ஏதுமிருப்பின் அவையாவும் தீர்வு செய்யப்படும்.

மாண்புமிகு நீதியரசர் திருமதி ஆர். பானுமதி
மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர்
மாண்புமிகு நீதியரசர் திரு. எ.எஸ். போபண்ணா

புது தில்லி,
03.03.2020.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."